பெயர்: திரு.வேலுச்சாமி,

மாநிலம்: தமிழ்நாடு

முகவரி: பனப்பாளையம், செழியூர் அஞ்சல்,

மேட்டுப்பாளையம், கோவை

அலைபேசி: 09524492919



நான் வேலுச்சாமி, வயது 52. விவசாய குடும்பத்தில் பிறந்தவன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு 30 வருடங்கள் விவசாயத்தில் அனுபவம் உள்ளது. எனது குடும்பத்தில் அனைவருமே விவசாயம் தான் பிரதான தொழில். நான் விவசாயத்தை எனது தந்தையிடம் தான் கற்றுக் கொண்டேன். எனக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது.

எனக்கு 5 ஏக்கர் நிலத்தில் முக்கிய பயிர்களாக கத்திரி, தக்காளி மற்றும் அவரைக்காய்களை சாகுபடி செய்துள்ளேன். இந்த நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மேட்டுப்பாளையம் சந்தை பகுப்பாய்வாளர் மூலம் தினசரி விலை நிலவரங்களை தெரிந்து கொள்ளும் சேவையை பற்றி அறிந்து என்னுடைய அலைபேசி எண்ணை பதிவு செய்தேன். என்னுடையது நோக்கியா செல்போன். தினமும் மதியம் 2.30 மணிக்கு விலை நிலவரங்களை தெரிந்து கொள்வேன்.

கடந்த சில மாதங்களாக தினசரி தக்காளி விலை கோவை சந்தை நிலவரம் மற்றும் மேட்டுப்பாளையம் சந்தை நிலவரம் தினம் தெரிந்து கொண்டு வியாபாரிகளுடன் சண்டையிட்டு கூடுதலாக விலை பெற முடிகிறது. எங்கள் நண்பர்களிடம் என்னிடமும் வியாபாரிகள் காய் வாங்க வரும் பொழுது கண்டிப்பாக மற்றவர்களுக்கு கொடுப்பதை

விட கூடுதலாக விலை கிடைக்கிறது. கண்டிப்பாக இந்த சேவையை பயன்படுத்திய பிறகு தான் இந்த கூடுதல் லாபம் தெரிகிறது. இன்னும் ஐந்து பயிர்களுக்கு விலை நிலவரம் வந்தால் மிகவும் உதவியாக இருக்கும்.

என்னுடைய நண்பர்களிடமும் அவர்களுடைய அலைபேசி எண்களை பதிவு செய்யுமாறு வலியுறுத்தியுள்ளேன். விவசாயிகளுக்கான தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி கண்டிப்பாக என் போன்ற விவசாயிகள் வாழ்க்கைத் தரம் கண்டிப்பாக உயரும் என என்னுகிறேன்.